எம்.சி.ஓ.பி எண்: 3704 /2024 தேதி: 04.02.2026

மசா. : 1

பெயர் : மணிமேகலை

க /பெ. : சதீஷ்குமார்

வயது : 26

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 13 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. கேள்விப்பட்டுதான் தெரியும். என் கணவர் விபத்து சமயத்தில் குறுக்கே சாலையை கடக்கும்போது அவருடைய அஜாக்கிருதையால் விபத்து நடந்தது என்றால் இல்லை. விபத்து சமயத்தில் என் கணவருக்கு வயது 28. அவர் டிரைவர் வேலை பார்த்தார். அவருடைய வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் கணவரின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்துள்ளேன். பிரேத பரிசோதனை அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதில் வேதியல் அறிக்கைக்காக பென்டிங் என காணப்படுகிறது என்றால் சரி. அந்த அறிக்கை வந்தால்தான் இறப்பின் விவரம் தெரியும் என்றால் அது பற்றி தெரியாது. என் கணவரின் அப்பா, அம்மா இறந்துவிட்டார்கள். அவர் அக்கா மட்டும் உள்ளார். என் கணவரின் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்து என்னுடைய கணவரின் அஜாக்கிருதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து என்னுடைய கணவரின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.